# வடகிழக்கு புனரமைப்பிற்கு 21 நாடுகள் நிதிஉதவி

வடக்கு கிழக்கு மறு சீரமைப்புக்காக 21 நாடுகள் இலங்கைக்கு நிதி உதவியளிக்க முன் வந்துள்ளன. இந்நாடுகளுடன் யுனிசெவ் ஆசிய அபிவிருத்தி வங்கி உலக வங்கி போன்ற நிதிநிறுவனங்களும் நிதியுதவியளிக்க முன்வந்துள்ளன இது வரைகாலமும் நிதி வழங்கப்பட்டால் அது வடக்கு கிழக்குப் பகுதிகளில் பூரணமாக பயன் படுத்தப்படுமா என்றதினுலே நிதி உதவியளிக்க பலநாடுகள் முன்வரவில்லை தற்போது நிலைமை சீரடைந்துள்ளதனுலே மேற்படி நாடுகளும் பொது நிறுவனங்களும் நிதியுதவியளிக்க முன்வந்துள்ளன. இதே சமயம் பிரான்ஸ், பின்லாந்து, சுவீடன், நோர்வே, நெதர்லாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகள் ஏற்கனவே 2 ஆயிரம் கோடி ரூபா வடக்கு கிழக்குப் பகுதி புனரமைப்பிற்கு ஒதுக்கியுள்ளன. இதைத் தொடர்ந்தே மேற்படி 21 நாடுகள் நிதி உதவி வழங்க முன்வந்துள்ளன.


பக்கங்கள் எட்டு விலை ரூபா: 3-00

# முரசொலி

மலர் 04 இதழ் 71 செவ்வாய் 17-04-1990 (சித்திரை 04) ரமழான் 20


★ மட்டு பொலிஸார் 50 பேர் தெற்கிற்கு மாற்றியதை எதிர்த்து

# மட்டக்களப்பு பொலிஸார் மீள அட்டகாசம்; புலிகள் அடக்கினர்

## மூன்று பொலிஸாருக்குப் படுகாயம் பொலிஸ் நிலையம் புலிகளின் காவலில்

**நேற்று முன்தினமிரவு மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த ஒரு பிரிவு பொலிஸார் சிலர் வீதியில் இறங்கி கல்வீச்சில் ஈடுபட்டதுடன் பொதுமக்களை நோக்கிச் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர். பொதுமக்கள் சிலரும் தாக்கப்பட்டனர்.**

கடந்த வெள்ளி நடந்த அசம்பாவிதங்களில் ஈடுபட்ட ஐம்பது பொலிஸார் தென்னிலங்கைக்கு மாற்றப்பட்டதை ஆட்சேபித்தே இவர்கள் இந்நடவடிக்கையில் இறங்கினர். பொலிஸ் உயரதிகாரிகளையும் மீறி இந்தப் பொலிஸார் அடாவடித்தனங்களில் இறங்கியிருந்தனர் இச்சம்பவத்தால் மட்டுநகர் பதற்ற நிலைக்குள்ளானது. நிலைமை கட்டுக்கடங்காமல் செல்லும் சமயம் இரவு பதினொரு மணியளவில் விடுதலைப்புலிகள் அப்பகுதிக்குவந்து நிலைமையை தமது கட்டுப்பாட்டின் கீழ்

... 8ஆம் பக்கம் பார்க்க

## அலுமீனியப் பாவனையால் அபாயமான நோய்

அலுமீனியப் பாவனையால் ஏற்படும் அல்சிமர் என்னும் அபாயகரமான ஆட்கொல்லி நோயினுல் உலக சனத்தொகையினர் பலர் பாதிப்பு அடைந்துள்ளனர் என லண்டன் ஆய்வு ஒன்று கூறுகிறது. இன்னமும் மருந்து கண்டு பிடிக்கப்படாத இந் நோயினுல் பீடிக்கப்பட்டவர்கள் படிப்படியாக ஞாபக சக்தியை இழந்து இறுதியில் மரணத்தை தழுவிக்கொள்வார்கள் இந் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் கனவுக்கும் நனவுக்கும் வித்தியாசம் காணமுடியாது திண்டாடும் நிலை பரிதாபத்திற்குரியதாக இருக்கின்றதெனவும்

— 8 ம் பக்கம் பார்க்க

அதிகபயணிகளுடன் சென்றதால் நாவற்குழியில்

## மினிவான் குடை சாய்ந்தது நடத்துநர் பலி 25பேர் காயம்

நேற்றுப்பிற்பகல் நாவற்குழி செம்மணிவீதி—கண்டி வீதிச் சந்திக்கருகில் மினிவான் ஒன்று குடை சாய்ந்ததில் 25 பேர் படுகாயமடைந்ததோடு ஒருவர்மரணமடைந்துள்ளார்.

சாவகச்சேரியை நோக்கி அளவுக்கதிகமான பயணிகளுடன் சென்ற மினிவானே மேற்படிவிபத்துக்குள்ளாகியுள்ளது. இந்தமினிவானின் நடத்துநரே மரணத்தைதழுவியுள்ளார்.

அளவுக்கதிகமாக பயணிகளை ஏற்றியதனுலே மேற்படி விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவ்விபத்தில் படுகாயமடைந்த 12பேர் உடனடியாக யாழ் போதனு

— 8 ம் பக்கம் பார்க்க

## கொழும்பில் நேற்றுக்கடும்மழை வீதிபோக்குவரத்துகள் சீர்குலைவு

கொழும்பில் நேற்று முழுவதும் கடும் மழை பெய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. கடும் மழையினுல் போக்குவரத்துச் சேவைகளும் கணிசமான அளவு பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பின்புறநகர்ப்பகுதியில் பாரிய மரம் ஒன்று கடும் மழையை அடுத்து வீதிக்குகுறுக்கே சரிந்துள்ளது இத

— 8 ம் பக்கம் பார்க்க

## 17 வருடத்தின் பின் வருடப்பிறப்பு

பதினேழு வருடங்களுக்கு பின்னர் இம்முறை வடக்கு கிழக்கு மக்கள் அமைதியான

— 8 ஆம் பக்கம் பார்க்க

கற்பிட்டி கடற்படை முகாம்

## கடற்படை வீரர் வாக்கு வாதம் ஒருவர் கொலை மற்றவர் காயம்

கற்பிட்டி கடற்படை முகாமில் இரு கடற்படை சிப்பாய்களிடையே ஏற்பட்ட வாக்குவாதம் துப்பாக்கிச் சூட்டில் முடிந்தது இரு சிப்பாய்களுக்கிடையே தனிப்பட்ட சில பிரச்சினைகளால் சில நாட்களாகவே கருத்து முரண்பாடுகள் இருந்தன.

சம்பவ தினம் இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது இது உச்சகட்டத்தை அடைந்து இருவரும் ஒருவரை ஒருவர் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டனர்.

இத்துப்பாக்கிச் சூட்டில் ஒரு சிப்பாய் பலியானுர் மற்றவர் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பரீட்சை பின்போடப்படலாம்

யாழ்பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரண்டாம் ஆண்டுப் பரீட்சையை பிற்போடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத்தெரிய வருகின்றது.

இப்பரீட்சைகள் எதிர்வரும் 19-ம் திகதி ஆரம்பமாவதற்கு இருந்தது. அன்றையதினம் அன்னை பூபதியின் தியாக மரணம் நிகழ்ந்ததினுலே. பரீட்சைகள் பிற்போடப்படலாமெனத் தெரியவருகின்றது

வலிகாமம் பொறுப்பாளர் திரு. கிளி கோரிக்கை

# இன்றிலிருந்து சகல கடைகளும் ஒன்பது மணிவரை திறக்கப்படும்

நிலைமைகள் வழமைக்குத் திரும்பி வருவதையடுத்து இன்று முதல் யாழ் நகரில் இரவு ஒன்பது மணிவரை சகல வர்த்தக நிறுவனங்களையும் திறந்து வைக்குமாறும் இரவு பஸ் சேவையை பத்தரை மணிவரை நடாத்துமாறும் விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர். பொதுமக்கள் நன்மை கருதி சகல வர்த்தகர்களும் இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வலிகாமம் பொறுப்பாளர் கிளி அவர்கள் கேட்டுள்ளார்.

# ஒய்வு பெற்றேருக்குக் கூடுதல் ரயில்வே வாரண்ட் கிடைக்கும்

ஒய்வு பெற்றவருக்கும் அவரின் குடும்பத்தவருக்கும் விடுமுறைப் புகையிரத ஆணைச் சீட்டுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் ஒய்வு பெற்றவருக்கும் அவரின் குடும்பத்தவருக்கும் ஒரு சோடி புகையிரத ஆணைச்சீட்டே வழங்கப்பட்டு வந்தது.

அரசாங்க நிர்வாக, மாகாணசபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சின் இலக்கம் 16/90 சுற்றறிக்கையின் மூலம் இரண்டு சோடி ஆணைச்சீட்டுகள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## மீன் நோய் பீடிப்பு தணிவு என அறிவிப்பு

மட்டக்களப்பு வாவியிலும், நன்நீர்க் குளங்களிலும் சமீபகாலமாக மீன்களுக்குப் பீடித்திருந்த நோய்களின் தாக்கம் தணிந்துவிட்டது.

இதனால் மக்கள் எவ்வித கிலேசமுமின்றி மீன்களை உண்ணமுடிகின்றது.

இதேவேளை கடல் மீன்களில் எவ்விதமான நோயின் பீடிப்பும் காணப்படவில்லை.

மேற்படி தகவலை மட்டக்களப்பு மாவட்ட பதில் கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர் தெரிவித்தார்.

Niru Tuition Centre
KONDAVIL

A/L 90
இரசாயனவியல் -திரு. செல்வா
வினுவிடை வகுப்புக்கள்
சனி )
ஞாயிறு ) 7.15 — 8.15 ஆரம்பமாகின்றன

A/L 91 அசேதன இரசாயனம்
சனி )
ஞாயிறு ) 3.30—4.30 21.4.90 இல் ஆரம்பமாகிறது

A/L 91
பௌதிகவியல் திரு. கணேசன்
வெப்பவியல்
சனி )
ஞாயிறு ) 2.30 — 3,30 21.4.90 இல் ஆரம்பமாகிறது

04163

## வீதி திருத்த நடவடிக்கை

கடந்த பல வருடங்களாகக் குன்றும் குழியுமாகக் காட்சி தரும் ஆசீர்வாதப்பர்வீதியைத் திருத்தும்படி கோரியாழ் மாநகர ஆணையாளர் அவர்களுக்கு மகஜர் சமர்ப்பித்தும், நேரில் கலந்துரையாடியும் அரியாலை காந்தி சனசமூக நிலைய நிர்வாகிகள் கேட்டுக் கொண்டமைக்கமைய கூடிய விரைவில் இவ் வீதியைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வீதி திருத்தம் செய்யப்படுவதற்கென தற்பொழுது கற்கள் பறிக்கப்படுகின்றன. (47)

சிறு விளம்பரம்

தேவை

மின் தறி நெசவில் குறைந்தது 2 வருட அநுபவம் உள்ள பெண் நெசவாளர் உடன் தேவை. நேரில் வரவும். யூனியன் பவர் லூம், 190 ஆம் கட்டை யடி, நுணுவில், சாவகச்சேரி.

(041112)

## அன்னை பூபதி நினைவாக கிளிநொச்சியில்மௌனஊர்வலம்

அன்னை பூபதியின் இரண்டாவது ஆண்டு நினைவை வட்டக்கச்சி கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் வியாழக்கிழமை மௌன ஊர்வலமும் முழுநாள் உண்ணுவிரதமும் வட்டக்கச்சி-இராமநாதபுரம் சிற்றூர் அவையின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதில், மௌன ஊர்வலம் வட்டக்கச்சி இராமநாதபுரம் பகுதிகளில் சுமார் 6 மைல்களுக்கு இடம் பெற்றது. ஊர்வலத்திலும், உண்ணுவிரதத்திலும், வர்த்தகர்களும், பொது மக்களும், அரச தனியார் ஊழியர்களும் பெருமளவில் கலந்து கொண்டனர்.

இவ்விழா சிற்றூர் அவையின் தலைவர் திரு. கே. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது வட்டக்கச்சி விடுதலைப்புலிகளின் அரசியல் பொறுப்பாளர்களான அலெக்சாண்டர், நயீர், மற்றும் பல பொதுமக்களும் உரையாற்றினர்கள். (35)

மட்டக்களப்பில்

## இடம்பெயர்ந்த மீனவர் நலன் காண் நடவடிக்கை

கடந்த கால வன்செயல்களில் பாதிப்படைந்து தமிழகம் சென்று மீண்டுள்ள மட்டக்களப்பு மாவட்ட மீனவ இளைஞர்களுக்கும் தடுப்பு முகாம்களில் இருந்து தற்போது விடுதலையாகியுள்ள மீனவ இளைஞர்களுக்கும் ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய ஆணையர் திட்டத்தின்கீழ் கண்ணாடி நாலிழையிலான படகுகள் (இயந்திரத்துடன்) பதினைந்தும் மற்றும் பதினைந்து இயந்திரமற்ற மீன்பிடிப்படகுகளும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபருடன் இணைந்து மாவட்டக் கடற்றொழில் விஸ்தரிப்பு உத்தியோகத்தர் மேற்கொண்டுள்ளார்.

இதற்கான நேர்முகப் பரீட்சைகளில் 250 விண்ணப்பதாரிகள் கலந்து கொண்டனர்.

கூட்டுறவுச் சங்கம்

## தலைவர்கள் பிரச்சினை குறித்து கொழும்பில் பேச்சுவார்த்தை

கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்து தனித் தனியாக நடத்தப்படவிருக்கும் பேச்சுவார்த்தைகளில் கலந்து நாடு முழுவதிலும் உள்ள எண்ணாயிரம் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களும் மற்றும் ஏற்றுமதிச் சபை உறுப்பினர்களும் விரைவில் கொழும்புக்கு அழைக்கப்படவுள்ளார்கள்.

உணவுக் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. வீரசிங்கம் மல்லிமாராச்சி இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

# அன்னை பூபதிக்கு அஞ்சலி



லிங்கம் கூல் ஸ்பொட்
மானிப்பாய்

ஸ்ரீராப்ஸ் ஷொப்பிங்கொம்பிளக்ஸ்
மானிப்பாய்

S. குமார் கபே
மானிப்பாய்

சின்னத்துரை ஸ்ரோர்ஸ்
மானிப்பாய்

ரஞ்சன்ஸ் காட்வெயர்ஸ்
மானிப்பாய்

சிவாஸ் மினி சொப்பிங் சென்ரர்
மானிப்பாய்

சுதா சவுண்ட் விஷன் அன்ட் ரைப் சென்ரர்
மானிப்பாய்

வேள்வித் தீயில் வாடினுய்!
ஒரு
விடியல் ராகம் பாடினுய்!
நெஞ்சில் மண்ணைச் சூடினுய்!
ஈழ
நிலத்தின் விடுதலை நாடினுய்!
உண்ணுவிரதம் கூடினுய்!
உயர்
உரிமைப் போரில் ஆடினுய்!
எங்கே பகையெனத் தேடினுய்!
உன்
இறப்பால் அதனைச் சாடினுய்!

04160

# நாலு பக்கமும் கடல் ரின் மீனே இறக்குமதி

நான்கு பக்கமும் கடல் சூழ்ந்த எமது நாடு ரின் மீனே இறக்குமதி செய்வது எவ்வளவு கேவலம் என்று இப் பகுதியில் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம்.

இலங்கையின் கடல் வளத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பகுதிப் பிரதேசம் வடக்கு-கிழக்கு மாகாணங்களை அண்டியே உள்ளது.

எனவே எமது பகுதி மீன்பிடி ஏனைய பகுதிகளை விட அதிகமாக இருக்க வேண்டும்.

ஆனால், மாறாகக் கடந்த ஐந்து வருடங்களில் எமது மீன்பிடித் தொழில் பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளதாகக் கணிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

யாழ்.மாவட்டத்தில் 1983 இல் 48776 மெற்றிக் தொன்னாக இருந்த மீன் உற்பத்தி 1988 இல் 23775 மெற்றிக் தொன்னாக வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த ஐந்து வருடங்களில் மீன்பிடித் தொழில் சராசரி ஐந்து மடங்காக வீழ்ச்சியடைந்துள்ளது இதிலிருந்து தெரிகிறது.

இதே காலப்பகுதியில் இதேபோல் கருவாட்டு உற்பத்தியும் 5474 மெற்றிக் தொன்னிலிருந்து 3303 மெற்றிக் தொன்னாக வீழ்ச்சியடைந்துள்ளது.

**இதயநாதம்**

செவ்வாய்க்கிழமை 17-04-1990

நல்வாக்கு

*அடுத்தவன் உனக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிருயோ அதை நீ அவனுக்குச் செய். உனக்கு அவன் என்ன செய்யக் கூடாது என்று விரும்புகிருயோ அதை நீ அவனுக்குச் செய்யாதே.*
*-பைபிள்*

ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்

எமது பிரதேசத்தின் பாரம்பரிய தொழிலிலும் அடிப்படைத் தொழிலும் முக்கிய பொருளாதார மூலவளமும் உடையதான இந்த மீன்பிடித் தொழில் இவ்வாறு மூழ்கிப் போவதை நாம் வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பதா?

முதலில் கடற்றொழிற் பயிற்சிப் பள்ளிகள் நடத்தப்பட்டு மீன்படி பற்றிய தொழில் முறைப் பயிற்சிகளை நாம் மீனவருக்கு வழங்கவேண்டும்.

மீனவர்களை வெளிநாடுகளுக்குப் பயிற்சிகளுக்கு அனுப்புவதன் மூலம் கடற்றொழில் நிபுணர்களை உருவாக்க முடியும்.

மீன் பிடித்துறைக்குரிய பல வசதிகள் இன்று மீனவருக்கு அவசிய தேவையாக உள்ளது மீன்பிடித்துறைக்கு அருகாமையில் ஐஸ் உற்பத்திச் சாலை, படகு துறைகள், படகு திருத்துமிடங்கள் அவற்றில் முக்கியமானது.

தென்பகுதியில் நன்கு வளர்ச்சி கண்டுள்ள நன்னீர் மீன்வளர்ப்பு எமது பகுதிகளுக்கும் பொருத்தமானவை. நன்னீர் மீன் வளர்ப்புக்கு ஏற்றதாக ஏரிகள், களப்புகள், குடாக்கள், குளங்கள் எம்மிடம் உண்டு.

இவற்றுக்குத் தேவையான மீன் குஞ்சுகளை இக் காலப்பகுதியில் மன்னார், பூநகரிப் பகுதிகளில் பிடிக்கலாம் எனக் கூறுகின்றனர்.

மீன் அதிகம் பிடிபடும் காலத்தில் மீனைப் பதப்படுத்தி வைக்க முடியாத காரணத்தினால் மீனவர் மீனைக் குறைந்த விலைக்குச் சந்தைப்படுத்த வேண்டியுள்ளது.

சூரிய வெளிச்சமின்றியே நவீன முறையில கருவாடு தயாரிக்கும் கருவிகள் இல்லாமையினால் மாரி காலங்களில் பிடிபடும் மீனை மலிவாகச் சந்தைப்படுத்த வேண்டியுள்ளது.

இதே சமயம் தினசரி மீனின் விலை ஏறி இறங்குவதால் பலசிக்கல்கள் ஏற்படுகின்றன. மீன் விற்பனையைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செய்வதால் மீனவரும், பாவனையாளரும் பெரும் நன்மையடையலாம்.

மொத்தத்தில் எமக்குக் கடல்வளம் அதிகம் உண்டு. அதனைத் தகுந்த முறையில் பாவித்தால் எம் பொருளாதாரமும் பலமாகும்.

# மூன்றும் உலகில் வல்லரசுகளின் ஆதிக்கமும் இலங்கையில் இஸ்ரேலின் பிரவேசமும்

இம்மாதம 20ம் திகதியுடன இலங்கையிலுள்ள இஸ்ரேலிய நலன்காக்கும்பிரிவு மூடப்படவுள்ளது. இதனை முன்னிட்டு இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது

வேனிலோன்

பிரித்தானிய சாம்ராஜ்யத்தில் சூரியன் அஸ்தமிப்பதேயில்லை என்று ஒரு காலம் சொல்லப்பட்டது. கடந்த நூற்றுண்டுகளில் உலகில் வல்லரசுகளாக விளங்கிய பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் தமது பரப்பினை உலகெங்கும் வியாபித்து பல நாடுகளை தமது காலனித்துவத்தின் கீழ் ஆண்டுவந்தன.

கடந்த நூற்றுண்டின் இறுதியிலும் இந்நூற்றுண்டின் ஆரம்பத்திலும் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஏற்பட்ட விடுதலைப் போராட்டங்கள் ஆக்கிரமிப்பு நாடுகளின் பிடியை சற்றே தளரவைத்தன. மேலும் உலகப்போர்களுக்கு பிற்பட்ட காலகட்டத்தில், உலகில் முன்னணி வல்லரசுகளாக இருந்த பிரித்தானியா, பிரான்ஸ் ஆகியன தமது ஸ்தானங்களை இழந்தன. ஐக்கிய அமெரிக்காவும் சோவியத்யூனியனும் முன்னணி வல்லரசுகளாக தோற்றம் பெற்றன.

இந்நூற்றுண்டின் 40 களில் பிரித்தானியாவில் ஏற்பட்ட ஆட்சிமாற்றம் காலனித்துவ நாடுகளை ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து விடுபட வழி சமைத்தது. கன்சர்வேட்டிவ் கட்சி இரண்டாம் உலகப்போருக்கு பின்வந்த ஆண்டுகளில் செல்வாக்கினை இழந்தது. 'வின்சன்ட் சேர்ச்சிலின் தோல்வியை அடுத்து தொழிற்கட்சியைச் சேர்ந்த 'அட்லிபிரபு' பிரதமர் ஆனார். தொழிற்கட்சியின் ஆட்சியிலேயே பிரித்தானிய காலனித்துவ நாடுகள் பல சுதந்திரமடைந்தன,

உலகில் வல்லரசுகள் எனக் கருதப்படும் நாடுகள் இன்றும் ஏதோவொருவகையில் மூன்றும் உலக நாடுகளில் தமது ஆதிக்கத்தை செலுத்தவே செய்கின்றன. நவ காலனித்துவ முறையினால் வளர்முக நாடுகளில் பிரச்சினைகளைப் பல வடிவங்களிலும் ஏற்படுத்த வல்லரசுகள் முயல்கின்றன.

பவளத்தீவு என மேற்கு நாட்டவர்களால் வர்ணிக்கப்படும் நமது இலங்கையில் ஏற்பட்ட இனப்பிரச்சினை' அதனால் தோன்றிய அரசியல் நெருக்கடி என்பன நாட்டில் வல்லரசுகளின் தலையீட்டுக்கு வழிவகுத்தது. அவ்வகையில் ஐக்கிய அமெரிக்காவின் கருவியாக 1984 ஆம் ஆண்டில் இலங்கையில் இஸ்ரேலின் பிரவேசம் அமைகிறது.

1983 இற்கு பின்னர் இலங்கையில் ஏற்பட்ட இனப்பிரச்சினை காரணமாக தமிழ்ப் போராளிக் குழுக்களை அடக்குவதற்காக அப்போதைய ஜே. ஆர். அரசாங்கம் அமெரிக்காவின் உதவியை நாடியது. இந்தியா தெற்காசியாவில் வல்லரசாக இருப்பதன் காரணமாக அமெரிக்கா இவ்விடயத்தில் நேரடியாக தலையிடத் தயங்கியது எனவே இதனை இஸ்ரேலிடம் கையளித்தது.

இவ்வாறு ஆரம்பித்த இலங்கை - இஸ்ரேலிய உறவு சிறுபான்மை மக்களினதும், 1970 இல் இஸ்ரேலின் உறவைத் துண்டித்துக் கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் எதிர்ப்பினைக்கிளப்பின. மேலும் சர்வதேச ரீதியில் இலங்கைக்கு உதவி வழங்கும் மத்திய கிழக்கு நாடுகளும் இவ்விடயத்தில் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியதுடன் உதவிகளையும் நிறுத்திக் கொண்டன.

இதனால் பிரேமதாஸ தலைமையிலான தற்போதைய அரசு இம்மாதம் 20ஆந் திகதியுடன் இலங்கையில் அமைந்துள்ள இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவை மூடிவிடுவதென முடிவினை எடுக்கவேண்டியதாயிற்று.

இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சின் பணிப்பாளர் நாயகமும் மொசாட் உளவுப் பிரிவின் முன்னால் உபதலைவருமான 'டேவிட்கிம்ஸே'யே இலங்கைக்கு உதவி வழங்கும் தீர்மானத்தை எடுத்தார். பயங்கரவாத முறியடிப்பு நடவடிக்கைகளில் இலங்கை இராணுவம் 'ஷபாக' எனும் இஸ்ரேலிய நிறுவன ஆலோசகர்களின் கீழ் பயிற்சி பெற்று வருவதாக இலங்கையின் முன்னாள் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி அஸோஸியேட்டட் செய்தி ஸ்தாபன நிருபருக்கு தெரிவித்திருந்தார்.

தமிழ் போராளிகளின் நடவடிக்கைகள், நடமாட்டங்கள் போன்றவை கண்காணிக்கக்கூடிய விதத்தில் உளவுப் பின்னல் ஒன்றை ஏற்படுத்தவென ஆறு இஸ்ரேலிய உளவு நிபுணர்கள் இங்கு 1984 இல் செயற்பட்டு வந்துள்ளனர். 1961 இல் இராணுவச் சதிப் புரட்சிக்குத் தலைமை தாங்கியவரும் மரண தண்டனையிலிருந்து மயிரிழையில் தப்பியவருமான டக்ளஸ் லியனகே இலங்கை இராஜாங்க அமைச்சின் செயலராக 1979 இல் சேர்க்கப்பட்டார். இவர் 1984 ஒகஸ்ட் மாதம் இஸ்ரேலுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்கு 'டேவிட் சிம்சே' என்பவரைச் சந்தித்தார். 'டக்ளஸ் லியனகே'யின் இஸ்ரேலிய விஜயமும் அது தொடர்பான அவரது அறிக்கைகளும் இலங்கையில் கிளப்பிய சர்ச்சை காரணமாக கொழும்பு திரும்பியதும் தமது பதவியிலிருந்து ராஜினுமா செய்ய நிர்ப்பந்திக்கப் பட்டார்.

தமிழ் கிளர்ச்சியாளர்களுடனான பிணக்கு இலங்கை அரசினை அமெரிக்கா, இஸ்ரேல், தென்னாபிரிக்கா, பிரித்தானியா, இத்தாலி, பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளிலிருந்து யுத்த கருவிகள் வழிசெய்தது மேலும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கடல் ஒழுங்குகளைக் கண்காணிக்க ஆறு ரோந்து வள்ளங்களை வழங்க இஸ்ரேல் முன்வந்தது. இவ்விடயம் தொடர்பாக 'மத்தித்தியாகுபெலட்' என்பவர் இஸ்ரேலியப் பாராளுமன்றத்தில் 1985 மே 27ந் திகதி வினு எழுப்பியிருந்தார். இலங்கை- இஸ்ரேலிய உறவு, ரோந்து வள்ளங்கள் தொடர்பான ஒப்பந்தம் இவற்றில் உண்மையுள்ளதா என்பதே இவரது வினுவாகும். பாதுகாப்பு அமைச்சர் 'ரூபின்' இது குறித்து கருத்து வெளியிடுவது தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படுத்தும் எனத் தெரிவித்திருந்தார்.

இவ் உதவிகளுக்கு நன்றிக் கடனாக இஸ்ரேல் நலன்காக்கும் பிரிவை 1986 இல் இலங்கையில் அமைக்க இலங்கை அரசு சம்மதித்தது. அமெரிக்க தூதரகத்தில் அமைக்கப்பட்ட இந் நலம் காக்கும் பிரிவுக்கு 'டேவிட்மெற்ருய்' தலைமை தாங்கினுர். இவரை ஆசிய விவகாரங்களின் நிபுணரும் லியோனிஸ உளவுப் பிரிவாகிய மொஸாட்டின் உறுப்பினரும் என பிரித்தானிய வட்டாரங்கள் அடையாளம் கண்டுகொண்டன. 1984 ஜூனில் இவர் தங்கியிருந்த கொழும்பு ஹோட்டல் அறையொன்றின் அருகில் குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்தது. அதில் பெண்மணி ஒருவர் கொல்லப்பட்டது தெரிந்ததே.

1985இன் இறுதியில் அப்போதைய இலங்கை ஜனுதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனு பாரிஸ் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். அங்கு இஸ்ரேலியப் பிரதமர் ஸிமோன் பெரோஸுடன் அந்தரங்கப் பேச்சுவார்த்தையொன்றையும் நடத்தியிருந்தார்

எது எவ்வாறுயினும் ஆசிய நாடொன்றுடன் உறவுகளைப் புதுப்பித்துக்கொள்ள எடுத்த இஸ்ரேலின் முயற்சி பயனளிக்கவில்லை. மேலும் இலங்கையினுல் பெறப்பட்ட இஸ்ரேலிய உதவியினுல் தமிழர்களின் போராட்டத்தினை அடக்க முடியவில்லை. நிலைமை மோசமடையவே செய்தது. இதனை இலங்கை அரசாங்கமும் தற்போது உணர்ந்துவிட்டது.

## இன்று சிறிமா பிறந்ததினம்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவின் 74வது பிறந்த தினம் இன்றாகும்.

தனது பிறந்த தினத்தை அவர் ரோஸ்மீட் பிளேஸில் உள்ள தனது இல்லத்தில் அமைதியான முறையில் கொண்டாடுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## உணவுக் களஞ்சியம் திருத்த 2 கோடி நிதி ஒதுக்கீடு

வடக்கு, கிழக்கு மாகாணத்திலுள்ள உணவுக்களஞ்சியங்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட நெற்சந்தைப்படுத்தும் களஞ்சியங்கள் முதலானவற்றைத் திருத்துவதற்குப் புனர்வாழ்வு அமைச்சு சுமார் இரண்டு கோடி ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

இத்தகவலை வட கிழக்கு மாகாண உணவு ஆணையாளரும், உள்விவகார அமைச்சின் செயலாளருமான திரு. சி. பற்குணம் வெளியிட்டுள்ளார்.

## அம்பாறையில் தபாலகம் மூலம் ஓய்வூதியம் வழங்க கோரிக்கை

அம்பாறை மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறுகின்ற மூவின மக்களுக்கும் கடந்தகாலத்தில் இருந்து வந்த நடைமுறைகள் போன்று ஓய்வூதியங்கள் அந்தந்த தபாலகங்களில் பணமாக வழங்கப்படல் வேண்டும்

இவ்வாறு அக்கறைப்பற்று ஓய்வூதியம் பெறும் தமிழர் சங்கம் அம்பாறை அரசாங்க அதிபருக்கும், அகில இலங்கை ஓய்வூதியம் பெறுவோர் சம்மேளனத்திற்கும் மகஜர்மூலம் பகிரங்க வேண்டுகோள் ஒன்றினை விடுத்துள்ளது.

# அன்னை பூபதி கணபதிப்பிள்ளைக்கு

# எமது அஞ்சலி




அன்னை தமிழுக்காய் உதித்தாய்
ஆக்கிரமிப்பாளருக்காய் கொதித்தாய்
விண்ணும் மண்ணும் வியக்க
வீரமரணம் தந்தாய்
உன்னை அழித்தோர் இன்று இல்லை
அன்னை பூபதி அழிவதுமில்லை

முன்னையத் தமிழ்க் குலத்தின்
முதிர்ந்த நல்வீர வாழ்வில்
அன்னையர் பங்கை எல்லாம்
அவர்களின் வளர்ப்பால் வந்த
பிள்ளைகள் மேலே சொல்லிப்
பெருமைகள் பெற்றோர் கண்டோம்
அன்னை பூபதியே நீதான்
அன்னையர் பெருமை தன்னை
சென்னையில் டில்லி தன்னில்
செகத்தினில் விளக்கிக் காத்தாய்

## வவுனியா வர்த்தக சங்கம்

04164

அரச ஊழியர், உத்தியோகத்தர்

# 'கிக்'கில் இருந்தால் கல்தா சுற்றுநிருபம் மூலம் எச்சரிக்கை

ஒரு அரச ஊழியர் கடமை நேரத்தில் மட்டுமன்றி கடமை முடிந்த நேரத்திலும் அலுவலகச் சுற்றுடலில் மதுபோதையில் அல்லது மது அருந்தியவராக இருந்தால் அல்லது போதை வஸ்துகளைப் பாவித்திருப்பவராய் காணப்பட்டால் அவர் மீது ஒழுங்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேற்கண்டவாறு பொது நிர்வாக மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சு சுற்று நிருபத்தின் மூலம் அறிவித்துள்ளது.

இரு சிரேஷ்ட உந்தியோகத்தர்கள் சாட்சியமளிக்குமிடத்து ஒரு ஊழியர் பதவி நீக்கம் செய்யப்படுவார்.

ஒரு உத்தியோகத்தர் போதைவஸ்து பாவித்திருப்பதாகச் சந்தேகப்பட்டால் அவரை ஒரு வைத்திய அதிகாரி அல்லது சட்ட வைத்திய அதிகாரி முன் நிறுத்தி அவரின் அத்தாட்சியைப் பெற்ற பின் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டால் அவர் பதவி நீக்கம் செய்யப்படுவார்.

க. பொ. த. உயர்தர பரீட்சையில்

# அதிகபுள்ளிகள்பெற்றவர்களுக்கு அவுஸ்திரேலிய புலமைப் பரிசில்

இறுதியாக வெளிவந்த க. பொ. த. ப. உயர்தரப் பரீட்சைப் பேறுகளின்படி. மிக அதிக புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு அவுஸ்திரேலியா அரசின் 4 ஆண்டுகளுக்கான சிறப்புப் புலமைப் பரிசில் வழங்கப்படவிருக்கின்றது

மாகாணத்திற்கு ஒருவர் என்ற வகையில், ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் மிகக் கூடுதலான மொத்தப்புள்ளிகளைப் பெற்ற மாணவரொருவர் இந்தச் சிறப்புப் புலமைப் பரிசிலுக்குத் தகுதித் தெரிவு செய்யப்படுவார்.

இந்தமுறையில், வடக்குக் கிழக்கு மாகாணங்களிலிருந்து இரண்டு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

மேற்படி புலமைப் பரிசிலுக்குத் தகுதிபெற்றவர்களை, அந்தந்தப்பகுதிக் கல்வித் திணைக்களங்களே தேர்ந்தெடுக்கும்

அதே சமயம், கடைசியாக வெளியாகிய க. பொ. த. ப. உ/த பரீட்சைப் பெறுபேறுகளுக்கு உரிய புள்ளி விபரங்கள் இன்றுவரை கிடைக்கப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது

அரியாலைப் பொறுப்பாளர் பகீம்

# "மக்கள் நலன் பேணுவதே இன்று எம் தலையாய கடன்"

கடந்த சில வருடங்களாக மக்கள் நலனைபேணும் பல திட்டங்கள் சீரழிந்து செயலற்று இருப்பதை நாம் இன்றுகாணக் கூடியதாக விருக்கிறது. மக்களின் அத்தியாவசிய தேவைகளைப்புனரமைத்து மக்கள் கஷ்டங்களை நீக்குவது எமது தலையாய கடமையாக உள்ளது. எமது நாட்டிலுள்ள சிலதீயசக்திகளை தம்முடன் இணைந்து எமது பிரதேசத்தையும் மக்களின் பாதுகாப்பையும் சீரழித்த அந்நிய நாடு ஒன்றுடன் போராடி வெற்றி கண்ட நிலையில் நாம் இன்று எம் மக்கள் முன் நிற்கின்றோம். இது போன்ற மக்கள் பணிகளில் எம்மை ஈடுபடுத்துவது இன்றைய எமது பணியாக இருக்கின்றது.

இவ்வாறு நாயன்மார்கட்டில ஆரம்பிக்கப்பட்ட யுனிசெப் தண்ணீர் திட்ட ஆரம்ப வைபவத்தில விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி அரியாலைப் பகுதிப் பொறுப்பாளர் திரு பகீம் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் மக்கள் நலன் பேணுவதே இன்றைய பணிகளில ஒன்றுக இருக்கின்றது அண்மையில் ஏற்பட்டுவரும் அமைதி நிலைக்குப் பின் இப் பகுதியில் முதலாவதாக நடைபெறும் சீரமைப்புத் திட்டம் இதுவாகும் இதுபோன்ற சீரமைப்புத் திட்டங்களை நடைமுறைப் படுத்த நாங்கள்பூரண ஆதரவை வழங்கி வருகின்றோம் என்றுர். (33)

# வீணை எஸ்.பாலச்சந்தர் மாரடைப்பினல் மரணமானர்

"குரு" என்று ஒருவர் இல்லாமலே, விந்தை புரிந்த வித்தகர் வீணை எஸ் பாலச்சந்தர் அவர்கள் தமது 65 ஆவது வயதில் 13 ஆந் திகதி இரவு மாரடைப்பினுற் காலமாஞர்.

பிறவிக் கலைஞரெனப் பெரும் புகழ் பெற்ற இந்த இசைக்கலாமேதை தென்னிந்தியாவிலுள்ள தமிழ் நாடு மாநிலத்தைச் சேர்ந்தவர்.

வீணை இசைக்கலையில் தன்னிகரற்று விளங்கிய இந்தத் தமிழ் மகன் தனது ஒப்பற்ற இசைவல்லமைக்காகப் பற்பல விருதுகளையும்; "பத்மபூஷண்" எனும் தேசிய உயர் விருதையும் பெற்றவர்.

"அந்த நாள்" என்கிற பெயரில், பாடல்களே இல்லாத முதற் தமிழ்த் திரைப் படத்தைத், தமிழ்ச் சினிமாவுலகிற்கு அந்த நாளிலேயே அறிமுகப்படுத்தி வெற்றி கண்ட புதுமை ஆர்வலர் வீணை எஸ். பாலச்சந்தர்! "பொம்மை" எனுந் தமிழ்த் திரைப்படத்தையும் இயக்கி அளித்த அவர், பிற்பாடு சினிமாவுலகிலிருந்து முற்று முழுதாக ஒதுங்கி, இசையுலகிலே மட்டும் சஞ்சரித்துச், சாதனை நிகழ்த்தியவர் ஆவார்.

## தேசிய உடை அவசியம்

தீர்க்கமுடியாத பிரச்சனைகள் தவிர்ந்த ஏனைய மக்களின் பிரச்சினைகளை நன்கு தீர விசாரித்து, நீதியான முறையில் தீர்ப்பு வழங்கப்படவேண்டும். எல்லா விடயத்திலும் நாம் தலையிட விரும்பவில்லை. தீர்ப்பு வழங்கும் போது சபை உறுப்பினர்கள் தத்தமது தேசிய உடையில் சமூகம் அளிப்பது அவசியம்.

இவ்வாறு வவுனியா சுத்தானந்த இளைஞர் மண்டபத்தில் நடைபெற்ற வவுனியா நகர இணக்கசபை அங்குரார்ப்பணக் கூட்டத்தின்போது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்டப் பொறுப்பாளர் திரு.என். இனேஷ் தெரிவித்தார்

## சேவைகளைபரவலாக்க செஞ்சிலுவைச் சங்கம் அனுமதி கேட்கிறது

நிரந்தர அடிப்படையில் மனிதாபிமான சேவைகளைச் செய்வதற்கு 1889-ம் ஆண்டு நியமிக்சப்பட்ட சர்வ தேச செஞ்சிலுவைச் சங்க கமிட்டி வன செயல் காரணமாக வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு செல்ல முடியாதிருந்தது. இலங்கையின் மேற்கு மத்திய மத்திய- தென் மாகாணங்களில் பணியாற்றி வந்த இக்குழு தமது பணியை நாட்டின் இதர பகுதிகளுக்கும் அளிக்க வேண்டி அனுமதி கோரியுள்ளது.

## கிளி-யாழ் விசேட பஸ்சேவை ஆரம்பம்

கிளிநொச்சி அரசஊழியர்களுக்கான விசேட பஸ்சேவை 11ம்திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் கிளிநொச்சி அரச செயலகத்தில் இருந்து மாலை 4.30மணிக்கும் யாழ்ப்பாணம் மத்தியபஸ்நிலையத்தில் இருந்து காலை 6 30.மணிக்கும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (35)

## வீதிகளில் கல், மண்

கிளிநொச்சி மாவட்டத்தில், உள்ள பெருந் தெருக்களிலும் இணைத்தெருக்களிலும் பயணம் செய்ய முடியதபடி விறகுகளும் கற்களும், மணலும் குவியல், குவியலாகப் போடப்பட்டுள்ளதால் போக்குவரத்து பாதிக்கப்படுகிறது,

கிளிநொச்சி நகரில் உள்ள பிரதான வீதியில் விறகுகளும் குப்பைகளும் தெரு ஓரத்தில் குவிக்கப்பட்டுள்ளன 35

## புதிய நியமனம் இதுவரை இல்லை

உடுத்துறை கொத்தணி அதிபராக கடமையாற்றிய திரு. கே. வீ. இராசலிங்கம் கல்வி அதிகாரியாக பதவி உயர்வு பெற்று சென்றபின் இதுவரை உடுத்துறை கொத்தணி அதிபராக எவரும் நியமிக்கப்படவில்லை.

பிரதி கொத்தணி அதிபராக மருதன்கேணி இந்து தமிழ்க் கலவன் வித்தியாலய அதிபர் திரு. பொ. சங்கரப்பிள்ளை அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளார். (18)

## அடிக்கல் நாட்டு வைபவம்

அரியாலை ஸ்ரீ கலைமகள் சன சமூக நிலைய மக்கள் கலையரங்கத்திற்கான அடிக்கல் நாட்டு வைபவம் அண்மையில் இராஜேஸ்வரி வீதியில் உள்ள நிலைய விளையாட்டரங்கில் நிலைய நிர்வாகத் தலைவர் திரு. வ. தம்பையா தலைமையில் நடைபெற்றது. இவ்வைபவத்திற்குப் பிரதம விருந்தினர்களாக யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம், யாழ் உதவி உள்ளுராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். நிவசலாலா ஆகியோர் கலந்து கொண்டனர். (17)

# கீரிமலையில் மடங்கள் சேதமடைந்த நிலையில்

கீரிமலைப் பகுதிக்கு யாத்திரிகர்களும், உல்லாசப் பயணிகளும் அதிகமாக வருகை தரத் தொடங்கியுள்ளனர். இவ்வேளையில் இவர்கள் தங்கிச் செல்ல வசதியான மடம் எதுவுமில்லாமல் அல்லல் படுகின்றுர்கள்.

முன்பு பெருந்தொகையான மக்கள் வந்து தங்கிச் செல்ல வசதியாகவிருந்த சிறுப்பர் மடம், இராணுவ நடவடிக்கைகளின் போது ஏவப்பட்ட 'ஷெல்லினுல்' சிதைவடைந்துள்ளது. மின்சாரவசதி எதுவுமில்லை, மண்டபங்கள் யாவும் திருத்தியமைக்க வேண்டிய நிலையில் உள்ளன.

கேணிப்பகுதியில், கடற்கரையோரமாகவுள்ள அந்தியேட்டி மடமும் திருத்தவேலைகளை எதிர்நோக்கியுள்ளது இதனுல் அந்தியேட்டி செய்வோருக்கும், செய்விப்போருக்கும் பல இடையூறுகள் ஏற்படுகின்றன. (25)

## அஞ்சலி

சிலாபத்தில் இடம் பெற்ற விபத்தில் மரணமான புலோப்பளை கிழக்கு ஆசிரியர் திரு. நாகமுத்து நற்குணத்தின் மறைவுக்குப்பச்சிலைப்பள்ளி விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு தனது அஞ்சலியைத் தெரிவித்துள்ளது.

யாழ். மாவட்ட

# தமிழ்மொழித்திறன் போட்டி இ. ம. கல்லூரியில் நடைபெறும்

1990ம் ஆண்டுக்கான யாழ் மாவட்டக் கோட்டக் கல்விப் பிரிவுகளுக்கிடையிலான பாடசாலைகள் பங்குபற்றும் தமிழ் மொழித்திறன் போட்டிகள் எதிர்வரும் 17ம், 18ம் திகதிகளில் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன

கடந்த 9.4.90 அன்று பண்டத்தரிப்புக் கோட்டத்தைச் சேர்ந்த 10 கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட உதவிப் பணிப்பாளர் கரு இ. சிவானந்தன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்சிகளுக்கு சுழிபுரம் கொத்தணியின் முன்னுள் அதிபர் திரு கே. கே. நடராஜா தலைமை வகித்தார். கொத்தணி மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் வென்ற ஐம்பதிற்கும் அதிகமான பாடசாலைகள் இப்போட்டியில் கலந்து கொண்டன.

ஐந்து பிரிவுகளாக மாணவர்களின் வகுப்பு ஒழுங்கில் பிரிக்கப்பட்டு நடைபெற்ற போட்டிகளில் பின்வரும் பாடசாலைகள் முதலாம் இடத்தைப் பெற்று யாழ்மாவட்ட கோட்டக் கல்வி பாடசாலைகளுடன் போட்டியிடுவர் என்று பண்டத்த்ரிப்பு கல்விக் கோட்டத் தமிழ்த்தினப் போட்டி செயலாளர் கே. நடராஜா தெரிவித்தார்.

முதலாம் பிரிவு - வாசிப்பு தெல்லிப்பழை மகாஜனககல்லூரி, எழுத்து அளவெட்டி அருணேதயக் கல்லூரி, ஆக்கம் வலந்தலை தெற்கு அமி த. க. பாடசாலை, பாஒதல் சீனன் கலட்டி ஞானேதய வித்தியாசாலை, குழு இசை பெரிய விளான் றே க த. க. பாடசாலை குழுநடனம் இளவாலை மெய்கண்டான் ம. வி.

இரண்டாம் பிரிவில் ;- வாசிப்பு வட்டு இந்துக்கல்லூரி ஆக்கம் தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாசாலை, பேச்சு காங்கேசன் துறை மகாவித்தியாலயம், பாஒதல் சீனன் கலட்டி ஞானேதய வித்தியாசாலை, பா ஒதல் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி. இசை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் மாதகல் நுணசை வித்தியாசாலையும், நடனம், தொல்புரம் விக்லேஸ்வர வித்தியாசாலையும்,மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலையும் நடேஸ்வராக் கல்லூரியும்,

மூன்றும் பிரிவில் ;- இரண்டாம் பிரிவின் விடய ஒழுங்கின் படி பின்வரும் பாடசாலைகள் முதவிடம் பெற்றன, சுழிபுர விக்ரோறியாக்கல்லூரி, வட்டு திருஞான சம்பந்த வித்தியாசாலை, இளவாலை மெய்கண்டான் ம. வி, காரைநகர் யாழ்ற்றன், மயிலிட்டி றே. க. த க, மகஜன மல்லாகம ம. வி, பண்டத்தரிப்பு ஜசிந்தா றே க. பாடசாலை மற்றும் வட்டு இந்துக் கல்லூரி,

நான்காம் பிரிவில் - பேச்சு நடேஸ்வராக் கல்லூரி, கட்டுரை மல்லாகம் ம. வி. சிறுகதை ஆக்கம் யூனியன் கல்லூரி, கவிதையாக்கம் நடேஸ்வராக் கல்லூரி, பாஒதல் யூனியன்கல்லூரி, இசை மகாஜனக் கல்லூரி, நடனம் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி ஆகியனவும்,

ஐந்தாம் பிரிவில்- வில்லிசையில பன்னுலை சேர் கனகசபை வித்தியாசாலை,நடனம்சித்தன் கேணி கணேசவித்தியாசாலையும் கட்டுவன்புலம் அ. த க பாடசாலையும், நாடகத்தில் இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம், பல்லியம் நடேஸவராக் கல்லூரி விவாதம் வட்டுக் கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலை ஆகியன மேற்படி மாவட்ட கோட்டக் கல்வி பாடசாலைகளுடன் போட்டியிடும்.

# வடக்கு-கிழக்கு கல்வி அலுவலர் நலன்புரிச் சங்கம் உதயம்

வடக்குக் கிழக்கு மாகாண கல்விச்சேவை அலுவலகர்களின் நலன்களைப்பேணும் பொருட்டு புதிய தொழிற் சங்கமொன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது

இச்சங்கத்தின் அங்குரார்ப்பணக்கூட்டம் கடந்த வியாழக்கிழமை காலை யாழ். நல்லூர் சாதனுபாடசாலை மண்டபத்தில் கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் யாழ்-மாவட்டத்தைச் சேர்ந்த கல்வியதிகாரிகள் பெருமளவில் கலந்து கொண்டனர். ஏனைய பகுதிகளில் உள்ள கல்விச் சேவை அலுவலர்களையும் சேர்த்து முறைப்படி வடக்கு கிழக்கு மாகாணக்கல்வி நிர்வாகச் சேவை அலுவலர்கள் சங்கத்தை உருவாக்குவதென்றும், அதுவரை தற்போது தெரிவு செய்யப்படும் நிர்வாகக் குழுவினர் செயலாற்ற அனுமதிப்பதெனவும் இக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

பின்வருவோர் இச்சங்கத்தின் நிர்வாகிகளாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. சி தியாகராசா (யாழ். கோட்டக்கல்வியதிகாரி), உப தலைவர்: திரு இ. க. குலசேகரம் (மருதனுமடம் கோட்டக்கல்வி அதிகாரி), இணைச்செயலாளர்கள்: திரு எஸ். கணேசபிள்ளை, ஜனுப் எஸ். ரகீம், பொருளாலர்: திரு. இ. சிவானந்தன் (40)

# தெங்கு பனம் பொருள் சங்கம் மீண்டும் சீருடன் செயற்படும்

வட, கிழக்கு தெங்கு பனம் பொருள் சங்கங்கள் மீண்டும் சிறப்பாகச் செயற்படவுள்ளன இதற்கான அறிகுறிகள் தென்படுவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

கிளிநொச்சிப் பிரதேசத் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் கடந்த மார்ச் மாதத்தில் ஒரு இலட்சத்து பதினையாயிரம் ரூபாவை நிகர லாபமாகப் பெற்றுள்ளது.

கடந்த காலங்களில் தெங்குப் பனம் பொருள் சங்கங்கள் யாழ். மாவட்டத்திலேயே இயங்கி வந்தன. தற்போது வட, கிழக்கிலுள்ள சகல மாவட்டங்களிலும் இக்கூட்டுறவு முறையினை அபிவிருத்திச் சபையினால் விரிவாக்கப்பட்டுள்ளது.

இதன் பலனாக மது சார்ந்த உற்பத்திகளை மட்டும்உற்பத்தி செய்யும் நிலை மாற்றப்பட்டு பனம் வெல்லம் கற்கண்டு பனம்பாணி பதநீர் போன்றவற்றையும் மேற்படி சங்கங்கள் கூடியளவில் உற்பத்தி செய்து வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## கிளி. நகரத்தில் கழிவுநீர் தேக்கம்

கிளிநொச்சி பொதுச் சந்தையின் தெற்குப் புறத்தில் அமைந்துள்ள மழைநீர் வடிகானில் கழிவுநீர் தேங்கி நிரபதால், துர்நாற்றம் வீசுகிறது.

பஸ் நிலையம் பக்கத்தில் உள்ளதால் இக்கானில் இருந்து வரும் அசுத்தக் காற்று பிரயாணிகளையும் பொதுமக்களையும் பாதிக்கிறது. (35)

பொலிஸாருக்கு அறிவுறுத்தல்

## சகல முறைப்பாடுகளும் பதியப்பட வேண்டும்

'பொலிஸ் நிலையங்களில் சகல முறைப்பாடுகளும் பதிவு செய்யப்படல் வேண்டும் எந்த ஒரு முறைப்பாட்டையும் பதிய மறுப்பது பொறுத்துக் கொள்ளப்படமாட்டாது என்று சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மாஅதிபர் திரு. ஏர்னஸ்ட் பெரேரா இது தொடர்பாக சகல பிரதி பொலிஸ் மா அதிபர்களுக்கும் விளக்கியிருப்பதாகவும் தெரிய வருகிறது.

பொலிஸார் பொது மக்களுடன் கண்ணியமாகப் பழக வேண்டிய அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## உதவிகல்வி பணிப்பாளர்களாக உதவி அரசஅதிபர்கள் நியமனம்

அரச வர்த்தமானி அறிவித்தலின்படி, உதவி அரசாங்க அதிபர்கள் யாவரும் உதவிக் கல்விப் பணிப்பாளர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

கல்வி அமைச்சின் செயலாளர் வெளியிட்டுள்ள, மேற்படி வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், உதவி அரசாங்க அதிபர்கள் எல்லோரும், தத் தமது முன்னைய பதவிப் பொறுப்புகளுடன், மேலதிகமாக உதவிககல்விப் பணிப்பாளர்ப் பதவிகளையும் வகிப்பதற்கு, அமைச்சரவை தீர்மானித்துள்ளதாதகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாடசாலை பெயர்மாற்றம்

வவுனியா மாவட்டத்தில் கோவில் புதுக்குளம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம் தற்போது கோவில் புதுக்குளம் கணேச வித்தியாசாலை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலை ஆரம்பிக்கப் பட்டபோது இப்பெயரிலேயே இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது.

## கீரிமலை வீதி மீண்டும் மூடப்பட்டது

பல வருடங்களின் பின் உபயோகத்திற்கு விடப்பட்ட கீரிமலை காங்கேசன்துறை கடற்கரைவீதி. மீண்டும் தற்போது மூடப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்பு காங்கேசன்துறையில் நடந்த சிலநிகழ்வுகளையடுத்து. இவ்வீதி இலங்கை பொலிஸாரினால் தடைசெய்யப்பட்டுள்ளது இவ்வீதி வழியே செல்வோரை குறிப்பிட்ட பகுதிக்கு அப்பால் செல்ல பொலிஸ் படையினர் அனுமதிக்க மறுக்கின்றார்கள். கடந்த சிலவாரங்களாக இவ் வீதி வழியேமகிழ்வுடன் நடமாடிய மக்களுக்கு மனவேதனை தரும் நிகழ்வாக இது உள்ளது. (25)

## கிளிநொச்சியில் எழுச்சி ஊர்வலம்

கிளிநொச்சி நகரில் அன்னை பூபதியின் நினைவாக தொடர்ந்து 21 நாளாக எழுச்சி ஊர்வலங்களும் சுழற்சி முறை உண்ணாவிரதமும் நடைபெற்று வருகிறது,

அன்னை பூபதியின் நினைவாக கிளிநொச்சி கந்தசாமி கோவில் மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள. அரங்கில் கிளிநொச்சி, கண்டாவளை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் வசிப்பவர்கள் ஒவ்வொருநாளும் பாடசாலை மாணவர்கள் சகிதம் சுலோக அட்டைகளுடன் எழுச்சி ஊர்வலமாக வந்து உண்ணாவிரதத்தில் பங்குபற்றுகின்றனர். (15)

## சங்கீதசபை சான்றிதழ் வழங்கப்பட்டது

வடஇலங்கை சங்கீதசபையினால் கடந்தஆண்டு நடத்தப் பட்ட பரீட்சைகளில் சித்தி பெற்றோருக்குச் சான்றிதழ் வழங்கும் வைபவம் கடந்த புதன்கிழமை காலை யாழ் இந்து மகளிர்கல்லூரிமண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்- கோட்டக் கல்வி அதிகாரி திரு.சி தியாகராசா இவ் வைபவத்திற்குத் தலைமை வகித்தார்.

## மரக்காலை தராசுகள் சீல் வைக்கப்படவில்லை

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அரசாங்கமரக்காலைத் தராசுகள் தவிரஏனைய பாவனையிலுள்ள தராசுகள் செப்பனிட்டு சீல் வைக்கப் பட்டு விட்டன.

மரக்காலை அதிகாரிகள் தமது தராசுகளுக்கு சீல் வைப்பிக்காததன் காரணம் என்ன என பொதுமக்கள் கேட்கின்றனர்,

கடந்த நான்கு வருடங்களாக இவை நாட்டு நிலமையால சீல் வைக்கப்படவில்லை சுமார் 16நாட்கள் சங்கானையில் சீல் வைப்பு வேலைகள் நடந்தும், சங்கானை வட்டுக் கோட்டை அரச விறகுகாலை தராசுகள் சரிபார்த்து சீல் வைக்கப்படவில்லை, (34)

## நிர்வாகிகள்

யாழ் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவு ஊழியர் சங்கத்தின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர்- அ தனபாலசிங்கம் உபதலைவர் சி நித்தியானந்தராஜா (நித்தி) கிளை முகாமையாளர் நாவாந்துறை செயலாளர் ப, நவரத்தினம் கிளைமுகாமையாளர் ஸ்ரேசன்சந்தி இணைச் செயலாளர் இ. தர்மகுலசிங்கம் பொருளாளர் சி. மகேந்திரராஜா செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## சுவையான செய்திகள்

### குட்டித்தூக்கம் நஷ்டமில்லை

'கர்புர்' என்று கர்ண கடூரமாகக் குறட்டை விடுகின்றவர்கள் மறு தினத்தை எரிச்சல் மற்றும் கோபத்துடன் தான் கழிகக வேண்டியிருக்குமாம். ஏனெனில் சிரமமான மூச்சு விடுதலைக் குறடடை தடுத்து விடுவதோடு ஆழ் தூககத்தையும் கெடுத்து விடுகின்றதாம் ஆனால் பகலில சிலர் குட்டித் தூக்கம் போடுகின்றார்களே அது ஒன்றும் கெட்ட பழக்கமில்லை. ஆரோக்கியமான பழககம் தான் என்கிறார்கள் தூக்க ஆய்வாளர்கள். பகலில் ஒரு குட்டித் தூக்கம் போடுகின்றவர்கள் தொடர்ந்து உற்சாகத்துடன் பணியாற்றும் தெம்பை பெறுகின்றார்கள் என்று கூறுகின்றனர் பிரேம் பண்ணி சுவரில்மாட்டி வைக்க வேண்டிய தகவல் அல்லவா இது.

### 'வயதுவந்த' பிள்ளைகள்

ஜெடொ கவுஸ் என்ற அம்மணி தனது 144 ஆவது வயதில் சமீபத்தில் காலமாகி விட்டார். இவருடைய 108 வயது மகனும் 98 வயது மகளும் உயிருடன் இருக்கின்றனர். கடந்த பத்து ஆண்டுகளாக இவர் கண் பார்வை இல்லாது வாழ்ந்து வந்தார். 144 வயது வரை ஒருநாள் கூட டாக்டரிடம் இவர் போனதில்லை.

## முரசொலிக்கு வந்த கடிதம்

### சகல ஆசிரியர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படுமா?

ஆசிரியர்
முரசொலி

க. பொ. த. உயர்தர, சாதாரண தரப் பரீட்சைகளுக்கு மேற்பார்வையாளர்களாகக் கடமையாற்றவும் இப்பரீட்சை விடைத்தாள்களுக்குப புள்ளியிடவும் ஒரு குறிப்பிட்ட அசிரியர்களே திரும்பத் திரும்ப தெரிவாகின்றனர். பரீட்சை மேற்பார்வை யாளர்களாகவும் விடைத்தாள்களைப் புள்ளியிடவும் தெரிவாவதன் மூலமாக மேற்குறிப்பிட்ட பரீட்சைகளின் போது மாணவர்கள் எவ்வாறு விடை எழுதுகின்றனர், எத்தகைய வினாக்களைத் தெரிவு செய்கின்றனா, எப்படியான வினாக்கள் ஒதுக்கப்படுகின்றன போன்றவற்றை அறிந்து கொள்ள வாய்ப்பு உண்டாகும். இத்தகைய சந்தர்ப்பம் கிடைத்தால் தமது கற்பித்தல் முறைகளை மீளாய்வு செய்து மாணவர்களை இப்பரீட்சைகளுக்குத் திறம்படத் தயார் செய்ய ஆசிரியர்களால் முடியும். ஒருசில ஆசிரியர்கள் மட்டுமே இச்சந்தர்ப்பத்தினைப் பெறுவதால் ஏனைய ஆசிரியர்கள் தமது மாணவர்களை உரிய முறையில் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்த முடிவதில்லை. எனவே க. பொ. த. உயர்தர சாதாரண தர வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர்கள் இப்பரீட்சை மேற்பார்வையாளர்களாகக் கடமையாற்றவும் புள்ளியிடவும் தெரிவாவதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும். சுழற்சி முறையில் தெரிவுகளை மேற்கொண்டால் சகல ஆசிரியர்களுக்கும் இந்த வாய்ப்பு கிடைக்கும் என்பதனைப் பரீட்சைத் திணைக்களத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

சாவகச்சேரி — பி. ஜெயக்குமார்

### சங்கானை பொது நூலகத்தில் 'முரசொலி' 'ஈழநாதம்' இல்லை

ஆசிரியர்
முரசொலி

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின்கீழ் இயங்கும் சங்கானை பொதுநூலகத்தில் 5.4.90 முதல் 'முரசொலி', ''ஈழநாதம்'' ஆகிய பத்திரிகைகள் இடைநிறுத்தப் பட்டுள்ளன. பிந்திய செய்திகளை முந்தித் தரும் பத்திரிகையான முரசொலியும், அபிமான பத்திரிகையான ''ஈழநாதமும்'' இடைநிறுத்தப்பட்டமை குறித்து இப்பகுதி வாசகர்கள் அதிருப்தியும், ஆட்சேபமும் தெரிவித்துள்ளனர்.

சங்கானை — என் தனபால்

## நயினை மணிபல்லவ கலாமன்ற 28 வது ஆண்டுவிழா நிகழ்ச்சிகள்

நயினாதீவு மணிபல்லவ கலா மன்றத்தின் 28-வது ஆண்டு நிறைவு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் இன்றுநடைபெறும். இரவு 8. 45 மணிக்கு சட்டமும் சமுதாயமும் என்ற தலைப்பில் தியாகர் திருநாவுக்கரசுவும், வரலாற்றுப் போக்கில் வள்ளுவம் என்ற தலைப்பில் ஈழத்துச் சிவானந்தனும் கருத்துரை வழங்குவர்.

9. 30 மணிக்கு கவிஞர் சண்முகநாதபிள்ளையின் தலைமையில் 'போதை' என்ற கவியரங்கில் விசுவலிங்கம், க. பரராசசிங்கம், குலசிங்கம், தேவதாஸ் ஆகிய அறிஞர்கள் பங்குபற்றுகிறார்கள்.

10. 30 மணிக்கு ஸ்ரீ நாகபூஷணி மகா வித்தியாலயம் வழங்கும் கோலாட்டம்,நயினை மகாவித்தியாலயம் வழங்கும் 'நயினைக் குறவஞ்சி' ஸ்ரீ கணேச கனிஷ்ட மகாவித்தியாலயம் வழங்கும் கோலாட்டம், நாவலர் சன சமூக நிலையம் வழங்கும் 'சின்னச் சின்னச் சிறுமிகளே' நடனமும் இடம்பெறும்.

இரவு 11. 15க்கு ஸ்ரீ நாகபூசணி வித்தியாலயம் வழங்கும் 'நினைப்பது நடப்பதில்லை' என்ற நாடகமும் இரவு 11. 30 க்கு நயினை மகாவித்தியாலயம் வழங்கும் 'பூம்புகார்' என்ற நாடகமும், 12 மணிக்கு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம் வழங்கும் 'அக்கரை பச்சையில்லை' என்ற நாடகமும் 12. 30க்கு மீனாட்சி நடனலாயம் வழங்கும் 'ஏழை விடும் கண்ணீர்' என்ற நாடகமும் 1. 15 ற்கு ஸ்ரீ முருகன் சனசமூக நிலையம் வழங்கும் 'பயம் துரத்துகிறது' என்ற நாடகமும் 2மணிக்கு மறைந்த மாமேதை நடிகமணி வைரமுத்து கலாமன்றம் அளிக்கும் 'பூதத்தம்பி' என்ற இசை நாடகமும் இடம்பெறும்.

## தீவுப்பகுதியில் சிற்றூரவை

தமிழீழ விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியினால் தீவுப் பகுதியில் சிற்றூரவைகள் அமைக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன இந்த வகையில் வேலணை அல்லைப்பிட்டி ஆகிய பகுதிகளில் சிற்றூரவை கிளைகள் நிறுவப் பட்டுள்ளன' மக்கள் முன்னணி தீவப்பகுதி அரசியல் பொறுப்பாளர் திரு வி.காஸ்ரோ தலைமையில் இவ் வமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன (24)

## உங்களுடையதா?

சரவணை கிழக்கைச் சேர்ந்த ஆறுமுகம் சின்னத்துரை என்பவருடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப் பட்டு முரசொலி அலுவலகத்தின் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில், ஆசிரிய பீடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

# வவுனியாவில் விடைத்தாள் திருத்தும் நிலையம் அமையும்?

'வன்னிப் பிராந்தியத்தின் கேந்திர நிலையமாக விளங்கும் வவுனியாவில் விடைத்தாள் திருத்தும் நிலையம் ஒன்றை உருவாக்குவதற்கு தேவையான சகல முயற்சிகளையும் மேற்கொள்வேன்'

இவ்வாறு அண்மையில் நந்து முடிந்த க. பொ. த (சா த) பரீட்சையின் போது கடமையாற்றிய இணைப்பு உத்தியோகத்தர்கள் மேற்பார்வையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்ட ஒன்றுகூடல் தேநீர் விருந்துபசார வைபவத்தில் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். நவரட்ணராஜா தெரிவித்தார்.

இப்பரீட்சை நல்ல முறையில் நடைபெறுவதற்கு ஒத்துழைத்த சகல தரப்பினருக்கும் அவர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

## தமிழகத்தில் இந்தியப்படையை வரவேற்காத

# கருணாநிதியின் செயல் குறித்து ஆனந்தவிகடன் குற்றச்சாட்டு

இலங்கையில் இருந்த இந்தியப்படைகள் இந்தியா சென்ற போது அவர்களை வரவேற்க நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி கலந்து கொள்ளாததையிட்டு ஆனந்த விகடன் சஞ்சிகையில் வெளியிடப்பட்ட முதல்வரும் கடமையும் என்ற ஆசிரிய தலையங்கத்தில் ஈழப் பிரச்சனையில் ஒவ்வொரு வருக்கும் இந்தியத் தலையீடு பற்றி தனிப்பட்ட கருத்துகள் இருக்கலாம் என குறிப்பிட்டுள்ளது.

இந்தியப்படை அமைதிப் படையாக செயற்படவில்லை என்பதையோ மக்கள் கொடுமைப்படுத்தப்பட்டனர். என்பதையோ எழுத கருத்துக்கூற பத்திரிகைகளுக்கு சுதந்திரம் உண்டு ஆனால் அந்த சுதந்திரத்தை முதல்வர் எடுக்க முடியாது விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவர் தாம் வகிக்கும் உயர் பொறுப்பிற்கேற்ப சில கடமைகளை ஆற்ற வேண்டும் பல இராணுவ அதிகாரிகளுக்குக் கூட ஈழத்தில் இந்தியா மேற்கொண்ட நடவடிக்கை பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் மேலிடம் எடுத்த முடிவிற்காக முணுமுணுப்பில்லாமல் இட்ட கட்டளையை செய்தது.

சொல்லப்போனால் ஆயிரக் கணக்கில் உயிர்களை தியாகம் செய்து விட்டு தங்கள் பணி வெற்றியா தோல்வியா என்ற புரியாத ஒரு தயக்கத்துடன் இந்தியப்படை தமிழகத்தில் கால் வைக்கும் போது கடமையைச் செய்தீர்கள் வாருங்கள் என முதல்வர் கடமையுணர்வுடன் வரவேற்றிருந் இருந்தால் அவருக்கு பெருமை சேர்த்திருக்கும் என ஆனந்தவிகடன் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

## பௌர்ணமி கலைவிழா

ஆரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தில் பௌர்ணமிக் கலைவிழா அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. செல்வன் நா. சுகுணதாசன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் இலக்கியத்தில் நான் ரசித்த பாத்திரம், காட்சி, என்னும் இலக்கிய நிகழ்ச்சியும், குழந்தைகளின் நிகழ்ச்சிகள், மற்றும் சுவையான நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன,

## சுழற்சி முறை உண்ணாவிரதம்

அன்னை பூபதியின் ஞாபகமாக நெல்லியடிபஸ் நிலையத்துக்கு எதிரே உள்ள முன்றலில் சுழற்சி முறை உண்ணாவிரதம் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது.

கடந்த புதன்கிழமை ஆரம்பமான இச் சுழற்சி முறை உண்ணாவிரதம் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறும் இச் சுழற்சி முறை உண்ணாவிரதத்தில் பெருமளவில் ஆண்கள் பெண்கள் இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டு வருகிறார்கள். (50)

## சவூதியிலிருந்து பேரீச்சம்பழம்

சவூதி அரபு மன்னரின் பேரீச்சம்பழப் பொதிகள் வன்னி வாழ் முஸ்லீம் சமூகத்திற்கும் கிடைத்துள்ளது என வவுனியா, முஸ்லிம் வட்டாரங்களிலிருந்து அறிய முடிந்தது வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் முஸ்லீம் நோன்பு அனுஷ்டிக்கும் அன்பர்களுக்காக 310 பெட்டி கொண்ட 6200 கிலோ பேரீச்சம்பழம் கிடைத்துள்ளதாக வவுனியா பள்ளிவாசல் தலைவர் ஜனாப் சதாப்தீன் தெரிவித்துள்ளார். அமைச்சர் ஜனாப் ஏ. ஆமன்சூர் இதனை வன்னி முஸ்லீம்களுக்கு அனுப்பிவைத்திருந்தார் எனவும் இவர் கூறினார்.

வவுனியாவிற்கு 130 பெட்டிகள் மன்னாருக்கு 140 பெட்டிகள் முல்லைத்தீவுக்கு 40 பெட்டிகள் வந்தன இவை அவ்வவ் மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (11)

## தீக்குளிப்பு

ஈழத்து இராமேஸ்வரம் - புங்குடுதீவு பாணாவிடை சிவன் தேவஸ்தானததில் 17ம் திகதி 6ம் திருவிழா தினத்தன்று புங்குடுதீவு இளம்தமிழர் மன்றம் ஊரதீவு சனசமூக நிலயம் ஆகியவற்றின் ஆதரவுடன் இரவு விஷேட நிகழ்ச்சியாக தீக்குளிப்புவைபவம் இடம் பெறும்.

## கள் விலையில் மாற்ற மில்லை

தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச்சங்கங்களின் கீழ் உள்ள கள்ளுத்தவறணைகளில் கள்ளின் பழைய விலையில் மாற்றமில்லை எனக்கூறப்படுகிறது. கள் போதியளவு இருக்கின்ற போதிலும் தென்னங் கள் போத்தல் 9 ரூபாவாகவும் பனங் கள் போத்தல் 6 ரூபாவாகவும் விற்பனவு செய்யப்படுகிறதாகக் கள்ளுப்பிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்

## புதிய நிர்வாகிகள்

பண்டத்தரிப்பு ஐக்கிய விளையாட்டுக்கழக வருடாந்தக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர் விபரம் வருமாறு.

தலைவர் திரு கே. சின்னத்தம்பி, உபதலைவர் தி சிவசுந்ரம், செயலாளர் எஸ். புவனேந்திரன், தனாதிகாரி ஆர். லவன். உசதனாதிகாரி பி தவக்குமார், மைதானப் பயிற்சியாளர் என் மகேந்திரராசா (37)


## "M" THREE TRAVELS

### வழங்கும் சவூதி அரேபியா பிரயாணம்

| | Vacancy |
|---|---|
| Executive Secretary [நிர்வாக காரியதரிசி] | 2 |
| Accountant | 2 |
| Chartered Accountant | 2 |
| Auto Mechanic | 20 |
| Diesel Meehanic | 10 |
| Radio Tehnician | 10 |
| 1st Class Cook | 20 |
| Cook (Western) | 20 |
| Waiters | 16 |

மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கான சம்பள விபரம் நேர்முகப்பரீட்சையில் தெரிவிக்கப்படும்.

இவற்றிற்கு நீங்கள் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

"M" Three Travels

தலைமையலுவலகம்
"இந்திரபவனம்"
சோதி வீதி
காங்கேசன்துறை,

கிளையலுவலகம்
இல. 1, 2வது ஒழுங்கை
மின்சார நிலைய வீதி.
யாழ்ப்பாணம்

04159



## A/L Physics

ஆசிரியர்
R. சத்தியசீலன்
B. M. C முன்லேன்
யாழ்ப்பாணம்
A/L 90 (Mon to Fri)

8. 30 a. m வெப்பவியல்
9.30 a.m மீற்றர்ப் பாலம்
4. 30 p.m ஒளியியல்

ஆரம்பம்: 18. 04 90
புதன்கிழமை காலை
8. 30 மணி

04153


## ரமழான் சிந்தனைகள்

### பெற்றோருக்கு மாறு செய்வரின் கதி!

அல்லாஹ் ஒவ்வொரு பாவத்தையும் அவன் எப்போது மன்னிக்க நாடுகிறானோ, அப்போது மன்னித்துவிடுகிறான். "ஆனால் பெற்றோரிடம் உறவை முறித்து வாழ்வதால் மரணத்திற்கு முன்னதாகவே அதன் தண்டனையைக் கொடுத்துவிடுகிறான்" என்று பெருமானார் (ஸல்) அவர்கள் எச்சரித்தார்கள். (மிஷ்காத்)

"ஒவ்வொரு பாவத்திற்கும் உரிய தண்டனையை இறைவன் மறுமையளவில் பிற்படுத்தி விடுகிறான் ஆனால், பெற்றோருக்கு மாறு செய்தவனுக்குத் தண்டனையை வெகு விரைவில் உலகத்திலேயே கொடுத்துவிடுகிறான்" என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

## "வீணை" காலமானது!

கைவிரல் நாடகம் ஓய்ந்ததோ?
ஓ நீ
கானமாமலை சாய்ந்ததோ?
இசையெனும் மாநதி காய்ந்ததோ?
நம்
இருதயம் துயரினிற் தோய்ந்ததோ?

- பாரதிசீலன்

(நேற்று முன்தினம் காலமான தென்னிந்தியாவின் பிரபல வீணை வித்துவான் எஸ் பாலச்சந்தர் அவர்களின் நினைவுக்காக இவ்வஞ்சலிக் கவிதை பிரசுரமாகிறது.)

## இன்று நாள் எப்படி?

மேடம்: பிதாவழியுதவி, வாகன இலாபம், வணிகர்கள் கடற்தொழில் மூலம் நன்மை, பெரியோர் ராசி, புகழ் தேடிவரும்.

இடபம்: மனக்கிலேசம், மாமன் வழி பகை, பொருள் நஷ்டம், தேடியவர் வருகை, தடைப் பட்ட பணவரவு.

மிதுனம்: விவாக நிச்சயம், பணவரவு, வாகன சுகம், இயந்திரத்தொழில் மூலம் நன்மை, திடீர்ப்பிரயாணம், சகோதர வழியுதவி.

கடகம்: சத்துருபீடை, மாதா வழியுதவி, கல்வியாற் தொழில், காதலர் மகிழ்ச்சி, தூரதேசச் செய்தியால் நன்மை.

சிங்கம்: வாக்கு வசீகரம், உயர்பதவி, உத்தமர் உறவு, தேடியவர் வருகை, வாகன மாற்றம், வணிகர்கள் இலாபம்.

கன்னி: இளைய சகோதரவழியுதவி, எண்ணிய எண்ணம் நிறைவு, வாக்கு வசீகரம், உயர்பதவி, பணவரவு.

துலாம்: சுகஜீவியம், பணவரவு, வாகனசுகம், மனையலங்காரம், மாமன் வழியுதவி, இராஜமரியாதை, கல்வியாற் தொழில்.

விருட்சிகம்: பிரிந்த காதலர் ஒன்று சேருவர் இயந்திரத் தொழில் கடற்தொழில் கலைஞர்கள் அதிக இலாபம் அடைவார்கள்.

தனுசு: பெண்களாற் பகை, பெரியோராசி, வாக்குப்பலம், கல்வியாற்தொழில், பிரிந்த காதலர் ஒன்று சேருவர்.

மகரம்: உயர்பதவி, பணவரவு, இராஜமரியாதை, தேடியவர் வருகை, சுகஜீவியம்.

கும்பம்: சுகஜீவியம், பிதாவழியுதவி, தடைப்பட்ட காரிய நிவர்த்தி, விவாக நிச்சயம், புதுத்தொழில்.

மீனம்: புகழ் தேடிவரும், வாக்குப்பலிதம், எண்ணிய எண்ணம்நிறைவு, இளைய சகோதரருதவி, மாமன் வழியுதவி, வாகனச்சேர்க்கை.

★ யாழ் சோதிடர்
சः அரியநாயகம்

## மிருசுவில் பஸ் விபத்தில் ஒருவர் பலி; இருவர்காயம்

நேற்று முன்தினம் இரவு யாழ் நகரிலிருந்து கொழும்பு நோக்கிச்சென்றதனியார் பஸ் வண்டியொன்று பாதசாரிகள் மீது மோதியதில் இளைஞர் ஒருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார், மற்றிருவர் படுகாயமடைந்தனர்.

மிருசுவில் கிராம சபைக்கு அருகில் இவ்விபத்து இடம் பெற்றது. கொல்லப்பட்ட இளைஞர் லொறி யொன்றில் கிளீனராகத் தொழில்புரிபவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பாதசாரிகளை மோதிய பஸ் வண்டி உழவு இயந்திரமொன்றுடன் மோதிய பின்னர் நிறுத்தப்பட்டது இந்த பஸ்வண்டி யாழ் நகரிலுள்ள பிரபலபோக்குவரத்து நிறுவனமொன்றுக்குச் சொந்தமானது எனத் தெரிவிக்கப்பட்டது.

# அன்னை பூபதி நினைவாக புங்குடுதீவில் உண்ணாவிரதம்

(புங்குடுதீவு)

எழுச்சியின் வடிவம் அன்னை பூபதி கணபதிப்பிள்ளை நினைவாக மாபெரும் உண்ணாவிரதமும், பொதுக்கூட்டமும புங்குடுதீவு பெருங்காடு புனித சவேரியார் ஆலய முன்றலில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த உண்ணாவிரத நிகழ்ச்சியில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி அரசியற் பிரமுகர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றார்கள்.

மாலை 6மணிக்கு நடைபெறுகின்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் யாழ் மாவட்ட அரசியற் பொறுப்பாளர் ஸ்டான்லி - டொமினிக், தீவுப்பகுதி அரசியற்பொறுப்பாளர் திரு. கஸ்ரோ, தீவுப்பகுதி அரசியல் பிரிவைச் சேர்ந்த திரு. நரேஸ், தீவுப்பகுதி மகளிர்பிரிவுப் பொறுப்பாளர் செல்வி சோபிகா, வலிகாமம் அரசியற்பிரிவுப்பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர், ப. தனகலிங்கம், திரு சு. கருணாகரன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

இவ்வைபவத்தில் கவி அரங்கு, இசை அரங்கு, விடுதலைப்புலிகளின் நலன் விரும்பிகள் வழங்கும் நடந்துவந்த பாதை வில்லுப்பாட்டு, யாழ் விதாலயாவின் விடுதலைக் கானங்கள் இன்னிசை நிகழ்ச்சி என்பன நடைபெறவிருக்கிறது.

மேற்படி இந்த உண்ணாவிரதத்தை புங்குடுதீவு வர்த்தக சங்கமும், தீவுப்பகுதி தனியார் போக்குவரத்துச் சேவைச் சங்கமும் இணைந்து நடத்துகின்றன.

# பலாலி ஆசிரிய கல்லூரி மீள பழைய இடத்தில்

பலாலி ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையை முன்பு இருந்த இடத்திலேயே விரைவில் ஆரம்பிப்பதற்குச் சம்பந்தப்பட்ட கல்வியதிகாரிகளும், மற்றும் முக்கியஸ்தர்களும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இக் கலாசாலை ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம், பலபிரிவுகளடங்கிய ஆசிரியர்—ஆசிரியைகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. பல வசதியான கட்டடங்களும் அமைக்கப்பட்டன. மேலும் புதிய கட்டடங்கள் சிலவற்றை அமைப்பதற்குரிய நில வசதியும் இருக்கின்றது. ஆனல், துரதிர்ஷ்டவசமாக இராணுவக் கெடுபிடி நடவடிக்கைகளினுல் இக்கலாசாலை மூடப்பட்டுக் கோப்பாயில் இயங்கி வருகின்றது.

இங்கிருந்து இராணுவம் வாபஸாகிப் பலாலி பிரதான முகாமுக்குச் செல்லச் சம்மதந் தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது. இப்பகுதி மக்கள் தமது சகஜ வாழ்க்கையை விரைவில் ஆரம்பிக்கலாம் என்று தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக, வயாவிளான் பலாலி தெற்குக் கிராம அபிவிருத்திச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில், இந்தச் சுமுகமான சூழ் நிலையைத் தமக்குச் சாதகமாக்கிச், சில சுயநலவாதிகள் வயாவிளானிலிருந்து இக்கலாசாலையை வேறிடத்திற்கு மாற்றுவதற்குரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனரெனக் கண்டனந் தெரிவித்துள்ளது.

சகல வசதிகளும் பொருந்திய இக்கிராமத்தை விட்டு வேறிடத்திற்கு மாற்ற எடுக்கப்படும் எந்தவொரு முயற்சியையும் சங்கம் பலமாக எதிர்க்குமென்றும், விஷமத்தனமான சுயநலப் போக்கைச் சம்பந்தப்பட்ட மேலதிகாரிகள் மிகுந்த விழிப்புடன் அவதானிக்க வேண்டுமெனவும், இவ்வறிக்கையிற் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதுவருட விசேட ரயில் சேவை நாளை புதன்வரை நீடிப்பு

புதுவருடத்திற்காகரயில்வே திணைக்களம் ஒழுங்குசெய்த சகல விசேடரயில்சேவைகளும் நாளைவரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடபகுதிக்கான விசேட ரயில் சேவையும் நீடிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களின் நன்மைகருதியே மேற்படி சேவை நீடிக்கப்பட்டுள்ளது.

இறுதியாகநேற்றுமுன் தினம் இரவு காங்கேசன் துறையில் இருந்து கொழும்புக்கு விசேட ரயில் சேவை இடம்பெற்றது.

# ஹஜ் யாத்திரிகர்கள்பணமாக ரியால் கொண்டுசெல்ல வசதி

ஹஜ் யாத்திரைகளுக்கு சவூதி அரேபிய பணமான ரியால் கொண்டு செல்ல வசதிகள் செய்யப்பட்டிருப்பதாக ஹஜ் யாத்திரிகளின் கஷ்டங்களை இலகுபடுத்துவது தொடர்பாக இடம்பெற்ற உயர் அதிகாரிகள் மநாடுஒன்றின் போது முஸ்லிம் மத கலாசார விவகார ராஜாங்க அமைச்சர் ஏ. எச்.எம் அஸ்வர் தெரிவித்தார் ஹஜ்ஜுக்குப் போகும்யாத்திரிகர்கள்10நாட்களுக்கு முன்னரேநோய் தடுப்பூசிகளைப்போட்டுக்கொள்ள வேண்டும்எனவும் போடாதவர்களும் போட்டதாக போலி சான்றிதழ்கள் கொண்டு செல்பவர்களும் சவூதி விமான நிலையத்தில் வைத்து திருப்பி அனுப்பப்படுவார்கள் எனவும் இவர்களுக்கு எதிராக சவூதி அரேபிய அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதால் யாத்திரிகர்கள் இவ்விடயத்தில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

# கூட்டுறவுச்சங்க திருட்டு மோசடி குறைக்க கூட்டுறவுச் சங்கஊழியருக்கு விரைவில் சம்பளஅதிகரிப்பு

கூட்டுறவுத் துறையில் குறைந்த ஊதியம் பெறும் சகல கூட்டுறவு ஊழியர்களுக்கும் சம்பள அதிகரிப்பு ஏற்படுத்தப்படுமென உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. வீரசிங்கம் மல்லிமாராச்சி தெரிவித்துள்ளார்.

கூட்டுறவு ஊழியர்களுக்கு குறைந்த சம்பளம் வழங்கப்படுவதால் தான் அவர்கள் திருட்டு மற்றும் மோசடிகளுக்கு உட்பட்டு விடுகின்றனர் என்ற நிலை தொடர்ந்து நிலவ இடமளிக்கக் கூடாது எனவும், கூட்டுறவுத் துறை ஊழியர்கள் சேவை மனப்பான்மையுடன் கடமை ஆற்ற வேண்டும் எனவும் மேலும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## கொழும்பில்...

ல் இவ்வீதியூடாக நடைபெற்ற போககுவரத்துகள் நேற்று தடைப்பட்டிருந்தன.

இதேவேளை கொழும்பில் அடுத்த நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்கு காலநிலை சீரற்று இருக்குமெனவும் கடும் மழை தொடர்ந்தும் பெய்யும் எவவும்வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

## மினிவான...

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் இவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு;

வீ,கணபதிப்பிள்ளை மட்டுவில் தெற்கு(70), வீ. பிரபாகரன் சரசாலை தெற்கு (13), சி.வைரமுத்து சரசாலைதெற்கு (50), வெ, தெய்வமலர் கைதடி (28), எம் கனிஸியஸ் யாழ்ப்பாணம் (13), சு, வடிவழகி யாழ்ப்பாணம் (53), சி.செல்லத்துரை சங்கத்தானை (58)ராணிஉதயம்கைதடி(32), கமலாதேவி மகேந்திரன் நுணுவில் (57), து. இராமச்சந்திரன சாவகச்சேரி(40), தியாகராசா சகீந்தா (12), ஒருவர் மயக்க நிலையில் உள்ளார். (03)

## அலுமீனிய—

அலுமீனியப் பாவனையினுலே மூளையைத் தாக்கும் இந்நோய் ஏற்படுகின்றதெனவும் தெரிய வந்துள்ளது.


# காலமானர்

## திரு. பிள்ளையினர் தம்பிப்பிள்ளை (ஐயா)

சாவகச்சேரி வடக்கு முன்னை நாள் சாவகச்சேரி கிராம சபை, பட்டினசவப, நகரசபை அங்கத்தவரும் திருமதி நல்லம்மாவின் அன்புக் கணவரும் திருமதி. காங்கேசு இராசமணியம்மா. காலம் சென்ற திருச்செல்வம் அவர்களின் தந்தையும் மு. காங்கேசு, திருமதி. யோகேஸ்வரியின் அன்பு மாமனுருமாகிய பிள்ளையினர் தம்பிப்பிள்ளை (ஐயா) நேற்று (16-04-90) காலமானுர். அன்னுரின் பூதவுடல் ஈமக்கிரிலைக்காக 17-04-90 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-30 மணியளவில் கண்ணுடிப்பிட்டி மயானத்திற்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்படும்.

சாவகச்சேரி வடக்கு,
மீசாலை.

தகவல்
மு. காங்கேசு

04168


# 32 மாதங்கள் இந்தியப்படைக்கு 17கோடி 50 லட்சம் டொலர் செலவு

(புதுடில்லி)

கடந்த முப்பத்திரண்டு மாதங்களாக இலங்கையில் இந்தியப் படைகள் தங்கியிருந்ததால் இந்திய அரசுக்கு பதினேழு கோடி ஐம்பது இலட்சம் டொலர் செலவு ஏற்பட்டுள்ளது.

இத்தகவலை நேற்று இந்திய பாராளுமன்றத்தில் இந்தியப் பாதுகாப்பு இணையமைச்சர் ராஜராமண்ணு வெளியிட்டுள்ளார் அமைதிப் படைக்கான இந்தச் செலவு அவர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளம், அலவன்ஸ் ஆகியவற்றை அடக்கவில்லை.

1990 பெப்ரவரி மாதம் வரையுமே இக்கணிப்பீடு செய்யப்பட்டதாகவும் இறுதி மாதமான மார்ச் மாதத்திற்கான செலவு தமக்கு தெரியாது எனவும் இந்திய அமைச்சர் குறிப்பிட்டார்.

# வியாபாரிகள் ஒற்றுமை கோள்ளை முயற்சி தோல்வி

வெற்றிலைக்கேணி மருதடி வீதியில் நடைபெற இருந்த கொள்ளை முயற்சி அதிர்ஷ்டவசமாக முறியடிக்கப்பட்டது.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு சுமார்7மணியளவில் வெற்றிலைக்கேணி மருதடி வீதியில் நடைபெற்றது

கிளிநொச்சியில் இருந்து மீன் கொள்வனவு செய்வதற்கு வெற்றிலைக்கேணி கட்டைக்காடு ஆகிய பகுதிகளுக்குவரும் வியாபாரிகளிடமிருந்து பெருந்தொகைப் பணத்தைப் பறிப்பதற்கு கொள்ளையர்கள் திட்டமிட்டுள்ளனர்.

கொள்ளையர்கள் கூரிய ஆயுதங்கள் கத்திகள் வைத்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வியாபாரிகள் அனைவரும் சேர்ந்து கொள்ளையர்களுடன் மோதுண்டு இக் கொள்ளை முயற்சியை முறியடித்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (43)

## 17 வருடத்தின...

சூழலில் சுதந்திரமாகத் தமது வருடப்பிறப்பை கொண்டாடியுள்ளனர். இவ்வாறு ஜனதிபதி பிரேமதாஸ குருணகலில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றுகையிற் குறிப்பிட்டார். நாடு முழுவதும் ஆவலுடன்எதிர்பார்த்த அமைதியும் சமாதானமும் உதிக்கத் தொடங்கிவிட்டது எனவும் ஜனதிபதி தெரிவித்தார்.

## மட்டக்களப்பு...

கொண்டு வந்தனர்.

நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இச்சம்பவத்தில் மூன்று பொலிஸாரும் காயமடைந்தனர் தற்போது விடுதலைப் புலிகள் அப்பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு எவரும் வெளியே செல்லாதவாறு காவல் புரிகின்றனர்,

இதனை அடுத்து நேற்றுக் காலை மட்டுநகர் வழமைக்குத் திரும்பியது

இதேவேளை நேற்று முன்தினமிரவு வன்முறையில ஈடுபட்ட அனைத்து பொலிஸாரையும் தென்பகுதிக்கு இடமாற்றம் செய்ய பொலிஸ் அதிகாரிகள் துரித நடவடிக்கையில் இறங்கியுள்ளனர் அநேகமாக இன்று அவர்கள் தென்னிலங்கைக்கு அனுப்பப்பட்டு விடலாம் என கருதப்படுகிறது.

பொலிஸாரில் உள்ள சில எதிர்ச்சக்திகளே இத்தகைய வன்முறைகளுக்கு பின்னணியில இருப்பதாக தெரிவிக்கப் படுகிறது,

# வாகன காப்புறுதி இல்லாத வாகனங்கள் பாவனையில்

யாழ் மாவட்டத்தில் காப்புறுதி செய்யப்படாத பல வாகனங்கள் பாவனையில் உள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது இதனுல் வாகன உரிமையாளர்கள் வாகன அனுமதிப் பத்திரம் பெறமுடியாதுள்ளனர்.

கூடுதலாகமோட்டார்சைக்கிள்களே காப்புறுதி செய்யப்படாது பாவனையில் உள்ளன அண்மையில் அதிகளவு விற்பனையான சாலி மோட்டார் சைக்கிள்களே கூடுதலாக காப்புறுதி செய்யப்படாதுள்ளன.

காப்புறுதி செய்யப்பட்ட வாகனங்களுக்கே வாகன அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு வருகின்றது காப்புறுதி செய்யப்படாத வாகன சொந்தக்காரர்கள் முதலில் வாகனங்களை காப்புறுதி செய்யும் படி கேட்கப்பட்டுள்ளார்கள் (03

# ஒரு மாதத்தில் பாஸ்ப்போட்

யாழ் செயலகத்தில் ஒப்படைக்கப்படும் பாஸ்ப்போட் விண்ணப்பங்களுக்கு ஒரு மாதத்தினுள் பாஸ்போட் அனுப்பி வைக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பு குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் இதற்கான வேலைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

நேற்று ஆறுவிண்ணப்பங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொருவார இறுதியிலும் சேரும் விண்ணப்பங்கள் உடனடியாக அந்தந்த வாரத்தில் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன. (03)

# மாணவர் 3ம் நிலைக்கல்விபற்றி ஆராய்ச்சிக் கலந்துரையாடல்

மாணவர்களின் 3ம் நிலைக் கல்வி வாய்ப்புப்பற்றிய ஆராய்ச்சிக் கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 28ம் திகதி யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெறவுள்ளது.

இலங்கைத் திறந்தபல்கலைக்கழக உப வேந்தர் திரு டி. எஸ். விஜயசேகர, பேராசிரியர் ஆறுமுகம். யாழ்மாவட்ட முறைசாராக் கல்வி அதிகாரி திரு சுப்பிரமணியம் மற்றும் அதிபர்கள் மாணவர்கள் ஆகியோர் கலந்துகொள்வர்.

இக்கலந்துரையாடலை யாழ் பல்கலைக்கழகமும் யாழ்கல்வித் திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன. (03)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ், [பிறைவேட்] லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 62ஏ இலக்கத்திலுள்ள அச்சகப்பிரிவில் 17-04-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது